(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 44.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 மார்ச் 19, புதன்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

506/2025

கௌரவ மஞ்ஜுள சுரவீர ஆரச்சி,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றமானது பாராளுமன்ற சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட நிறுவனமா;

(ii) அதன் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது;

(iii) மேற்படி மன்றத்திற்கு சொந்தமான சொத்துக்கள் யாவை;

(iv) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை மேற்படி மன்றத்திற்கு வரவு செலவுத்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட தொகை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவு;

(v) மேற்படி காலப்பகுதிக்குள் மேற்படி மன்றம் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

507/2025

கௌரவ தினேஷ் ஹேமந்த,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள யானை தடுப்பு மின்சார வேலிகளை பாதுகாப்பதற்காக சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ள யானை தடுப்பு வேலி பயிலுனர் உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) இவர்களில் தற்போது சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள யானை தடுப்பு வேலி பயிலுனர் உதவியாளர்களின் எண்ணிக்கை எத்தனை;

(iii) இன்றளவில் சேவையில் நிரந்தரமாக்கப்படாத யானை தடுப்பு வேலி பயிலுனர் உதவியாளர்களை சேவையில் நிரந்தரமாக்குவதற்கு சட்டரீதியான தடைகள் காணப்படுகின்றனவா;

(iv) இன்றேல், இவர்கள் நிரந்தரமாக்கப்படாமைக்கான காரணங்கள் யாவை;

(v) சேவையில் நிரந்தரமாக்கப்படாத யானை தடுப்பு வேலி பயிலுனர் உதவியாளர்களை நிரந்தரமாக்குவதற்கு திட்டவட்டமானதொரு வேலைத்திட்டம் காணப்படுகின்றதா;

(vi) ஆமெனின், அவ்வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3.

511/2025

கௌரவ சுஜீவ திசாநாயக்க,— இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள அரச விளையாட்டுக் கட்டிடத் தொகுதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) குருநாகல் மாவட்டத்தில் அரச விளையாட்டுக் கட்டிடத் தொகுதியொன்று அமைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதி தாபிக்கப்பட்டுள்ள இடம் யாது;

(iv) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை முதலில் நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த இடம் யாது;

(v) இதனை வேறொரு இடத்தில் நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா;

(vi) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் வசதிகளை ஏற்பாடு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த விளையாட்டுக்கள் யாவை;

(ii) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியில் இற்றைவரை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ள விளையாட்டுக்கள் யாவை;

(iii) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிக்கவென மதிப்பீடு செய்யப்பட்டிருந்த தொகை யாது;

(iv) மேற்படி விளையாட்டுக் கட்டிடத் தொகுதியை பூரணமாக நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

(v) ஆமெனில், அதன் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படும் திகதி யாது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

514/2025

கௌரவ (டாக்டர்) நஜீத் இந்திக்க,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது தடுப்புக் காவலில் உள்ள அரசியல் கைதிகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு அரசியல் கைதியும் தடுத்து வைக்கப்பட்டுள்ள காலம், இவர்களுக்கு எதிராக உள்ள குற்றச்சாட்டுகள் மற்றும் தடுத்துவைப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ள சட்டம் வெவ்வேறாக யாது;

(iii) மேற்படி அரசியல் கைதிகளை விடுவிப்பதற்குள்ள திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

517/2025

கௌரவ ஹர்ஷன ராஜகருணா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1000 தேசிய பாடசாலைகளை உருவாக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இதுவரை தேசிய பாடசாலைகளாக அறிவிக்கப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அந்த ஒவ்வொரு தேசிய பாடசாலைக்கும் பெயர் பலகை மற்றும் பிரதான நுழைவாயிலை அமைப்பதற்கு வழங்கப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) தற்போது அந்தப் பாடசாலைகள் நிரல் அமைச்சின் மூலம் நிர்வகிக்கப்படுகிறதா இன்றேல், சம்பந்தப்பட்ட மாகாண சபையின் மூலம் நிர்வகிக்கப்படுகிறதா என்பதையும்;

(iv) அதன்படி, இதுவரை உருவாக்கப்பட்டுள்ள தேசிய பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(vi) அந்தத் தேசிய பாடசாலைகளின் பௌதீக வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு அவை நிரல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக ஒவ்வோர் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும் அமைச்சரவையின் உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர் அதன் தவிசாளராகவும், இராஜாங்க அமைச்சர், பிரதி அமைச்சர் மற்றும் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் வேறு இருபத்தொன்பது (29) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

2.

பாராளுமன்ற சபை முதல்வர்,— சட்டவாக்க நிலையியற் குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 113 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, சட்டவாக்க நிலையியற் குழுவானது, தவிசாளராக பிரதிச் சபாநாயகரையும் குழுக்களின் பிரதித் தவிசாளர் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு பதினைந்து (15) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

3.

பாராளுமன்ற சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 115 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி திருத்தத்துடன் பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவானது தவிசாளராகச் சபாநாயகரையும், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு இருபது (20) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

4.

பாராளுமன்ற சபை முதல்வர்,— நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 116 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவானது, தவிசாளராகச் சபாநாயகரையும் பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் தெரிவுக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு பத்து (10) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

5.

பாராளுமன்ற சபை முதல்வர்,— சபைக் குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 117 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, சபைக் குழுவானது, தவிசாளராகச் சபாநாயகரையும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு பதினைந்து (15) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

6.

பாராளுமன்ற சபை முதல்வர்,— ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 118 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பதினெட்டு (18) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

7.

பாராளுமன்ற சபை முதல்வர்,— அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவானது தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் முப்பத்தொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

8.

பாராளுமன்ற சபை முதல்வர்,— அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவானது, தெரிவுக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் முப்பத்தொரு (31) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

9.

பாராளுமன்ற சபை முதல்வர்,— அரசாங்க நிதி பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, அரசாங்க நிதி பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பதினெட்டு (18) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

10.

பாராளுமன்ற சபை முதல்வர்,— வழிவகைகள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 124 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, வழிவகைகள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இருபத்து மூன்று (23) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

11.

பாராளுமன்ற சபை முதல்வர்,— பொது மனுக்கள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 125 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, பொது மனுக்கள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இருபத்தொன்பது (29) உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

12.

பாராளுமன்ற சபை முதல்வர்,— உயர் பதவிகள் பற்றிய குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 127 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால் தடைபெறாமல், 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, உயர் பதவிகள் பற்றிய குழுவானது, தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பத்தொன்பது (19) உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

13.

பாராளுமன்ற சபை முதல்வர்,— பின்வரிசைக் குழு,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 129 இன் ஏற்பாடுகள் மற்றும் 2024 திசம்பர் 06 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றினால், தடைபெறாமல் 2025 மார்ச் 15 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு, பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் பணியாற்றுவதற்காக, பின்வரிசைக் குழுவானது, அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் மற்றும் தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் அரசாங்கக் கட்சியின் எட்டு (08) பின்வரிசை உறுப்பினர்களையும் எதிர்க்கட்சியின் எட்டு (08) பின்வரிசை உறுப்பினர்களையும் கொண்டிருக்குமாக.

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* அ 1.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — (ஒதுக்கப்பட்ட இருபத்துநான்காவது நாள்) — குழு ஆய்நிலை (பரிசீலனை, மார்ச் 18).

*2.

உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நிதிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2012 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2013 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 நவம்பர் 22 ஆம் திகதிய 2411/56 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.14 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உண்ணாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழான தீர்மானம்,— 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 75 (1) பிரிவின் கீழ் இரட்டை வரி விதிப்பினை தவிர்ப்பதற்காக மற்றும் வரி செலுத்தாது தட்டிக் கழிப்பதனை தடுப்பது தொடர்பில் 2013 யூலை 26 ஆம் திகதி பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டு, 2013 செப்டெம்பர் 17 ஆம் திகதிய இலக்கம் 1828/9 கொண்ட அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இந்தியக் குடியரசின் அரசாங்கத்திற்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கை திருத்தப்பட்டு, 2024 டிசெம்பர் 16 ஆம் திகதியன்று செய்துகொள்ளப்பட்டதும் 2025.02.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கூட்டிணைந்த பத்திரம் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 112 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2024 டிசம்பர் 22 ஆம் திகதிய 2415/79 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 1),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 சனவரி 27 ஆம் திகதிய 2421/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல. 2),— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— காலத்துக்குக்காலம் திருத்தப்பட்டவாறான (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் மதுபானங்கள் மீதான மதுவரித் தீர்வை தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 சனவரி 10 ஆம் திகதிய 2418/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 01/2025)

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் கட்டளை,— 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தித் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் உற்பத்தித் தீர்வை தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2025 சனவரி 10 ஆம் திகதிய 2418/43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.02.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 டிசம்பர் 31 ஆம் திகதிய 2417/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.03.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2025 ஜனவரி 27 ஆம் திகதிய 2421/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.03.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

வலுசக்தி அமைச்சர்,— இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1987 இன் 23 ஆம் இலக்க, அரச கூட்டுத்தாபனமாகவோ அல்லது அரசுடமை வியாபாரமாகவோ பொதுக் கம்பெனியாக மாற்றுதல் சட்டத்தின் 2(I) ஆம் பிரிவின் பிரகாரம், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2023.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*13.

வலுசக்தி அமைச்சர்,— இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் வருடாந்த அறிக்கை (2022),— 1987 இன் 23 ஆம் இலக்க, அரச கூட்டுத்தாபனமாகவோ அல்லது அரசுடமை வியாபாரமாகவோ பொதுக் கம்பெனியாக மாற்றுதல் சட்டத்தின் 2(I) ஆம் பிரிவின் பிரகாரம், 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, கம்பெனிகள் சட்டத்தின் கீழ் 2024.03.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2022.12.31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2024.05.08 ஆம் திகதி பரிசீலனை செய்யப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2024.07.09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*14.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை (2021),— 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகச் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் கீழ் 2023.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2021.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காகத் தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகள் அடங்கிய இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவினால் 2023.08.24 ஆம் திகதி பரிசீலிக்கப்பட்டு, அக்குழுவின் அறிக்கையானது 2023.09.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.)

*15.

குற்றச் செயல்களின் வரும்படிகள் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*16.

சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* **அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.**

---

## தினப்பணிகள் மீதான திருத்தங்கள் பற்றிய முன்னறிவித்தல்

அ1.

“ஒதுக்கீடு” எனும் சட்டமூலத்திற்குக் குழு ஆய்நிலையில் சமர்ப்பிக்கப்படுகின்ற திருத்தங்களைத் “தினப்பணிக்கான அனுபந்தம்” எனும் தனியிதழிற் பார்க்க.

---